UNIVERSAL
LIBRARY
OU_208018
UNIVERSAL
LIBRARY

OUP—2273—19-11-79—10,000 Copies.

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 894.8111 K88T    Accession No. PGTm 2751

Author Kovendhan.

Title Thozhanaippaaduven.

This book should be returned on or before the date last marked below.

# தோழனைப் பாடுவேன்

வி. இ. இலெனின் நூற்றாண்டு நினைவு நூல்

ஆக்கியோன்

த. கோவேந்தன்

விற்பனை உரிமை

இளங்கோ பதிப்பகம்

14, உஸ்மான் ரோடு : : சென்னை-17

முதற் பதிப்பு-ஆகஸ்டு 1-69
உரிமைப்பதிவு.
தங்கவேல்—கோவேந்தன். (1932)

## த. கோவேந்தன் எழுதியவை

1. கவிஞனின் காதலி
2. அமிழ்தின் ஊற்று
3. பேசும் ஓவியங்கள்
4. இருண்டவீட்டின் குடும்பவிளக்கு.
5. ஒன்றே உலகம்
6. அண்ணா வனப்பியம்
7. காந்தி மொழிக் குறள்
8. சிந்தனைச் செம்மலர்கள்
9. சங்கப் புதையல்
10. கம்பன் களஞ்சியம்

விலை ரூ. 2 - 50

நூலின் படங்களைச் சோவியத் ஒன்றிய அயல் நாட்டுச் செயற்களம் (தமிழ்நாடு) உதவியது.

பாரதம் பிரஸ், 14, உஸ்மான்ரோடு, சென்னை-17.

## அணிந்துரை

### கவிஞர்-சுப்பு ஆறுமுகம்

தோழனைப் பாடிடும் கோவேந்தனும் என்றன்
தோழனைப்பாடுவேன், பாடுவேன்-தமிழ்
வாழையடி வாழை என்ற மரபினில்
வந்த கவிஞனைப் பாடுவேன்!

துட்டுக்கும் மெட்டுக்கும் பாட்டெழுதும் நிலை
கெட்ட உலகமே நாணுவாய்-ஒரு
கட்டுக்குள் வையத்தைக் கட்டிக் கொணர்ந்திடும்
கவிதைகளை இங்குக் காணுவாய்!

ஆழந்தன்னைக்கடல் அலைகள் உணருமோ
அந்த அலைநிகர் அன்பன் நான்-கவி
வேழத்துடன் விளையாடும் முயல் எனும்
தோழமை கொண்டுள்ள நண்பன்நான்!

பொன்னகையின் மேலே பொன்னால் முலாம்பின்னர்
பூசிடவும் தேவை உண்டோமோ?-சேயின்
புன்னகையை அதன் அன்னைக்குணர்த்திட
முன்னுரையும் தேவை யாகுமோ!

மனித வடிவினில் மனிதர் நடுவினில்
மனித மனதோடு வந்தவன்-இலெனின்
புனிதமிகுபொது உடமைக் கருத்தினில்
புதிய உலகினைத் தந்தவன்!

ஆண்டவன் ஆக்கிய அவனியிதில் காலம்
வேண்டும் திருத்தங்கள் செய்தவன்-அன்று
மூண்ட நெருப்புக்கு முன்னே வந்து நின்று
முதல் விளக்கை ஏற்றி வைத்தவன்!

ஏழைக் கொருதெய்வம் வாழ்வுக் கொருதெய்வம்
தோழமைக்கோர் தெய்வம் வந்தது-நல்ல
கோழை மனத்திலும் வீரம் தந்து, மக்கள்
குலதெய்வமாய் அருள் ஈந்தது!

தார் எழுத்தைப் போலத் தலையெழுத்தாம் அதைத்
திருத்த முடியாது என்றனர்-இலெனின்
நீர் எழுத்தைப் போலத் தலையெழுத்தை மாற்றும்
நிலையைக் கண்டு பின்னே வந்தனர்.

பல்லாண்டு பல்லாண்டு சோவியத் வாழ்வதைப்
பார்த்துப் பார்த்துப் பாரும் வாழ்ந்திட-வழி
எல்லாம் வகுத்திட்ட நல்லார் இலெனின் புகழ்
எல்லாம் இதில்உண்டு பாடிட!

சிந்தனைச் செல்வனின் வாழ்வெனும் காவினில்
சென்றுலவும் கவிச்சிந்தனை-இது
சந்தனச் சோலையின் வானம்பாடி போலப்
பாடிக் கவர்ந்ததே என்றனே!

எண்ணுக்குள் ஒன்றினுக் கென்னபுகழ் உண்டோ
எங்கள் இலெனின்புகழ் அவ்விதம்-இதைப்
பண்ணுக்குள் கூட்டிய பாவலரின் புகழ்
பாவுலகில் வாழும் இவ்விதம்!

சிப்பிதனைத்தேடி முத்தமிடும் மழைத்
துளிதான் முத்தாக ஒளிபெறும்-மண்ணில்
ஒப்பற்ற தோழனைப் பாடிடும் கோவேந்தன்
கவிதான் அமுதாகப் புகழ்பெறும்!

அன்பறிவு ஆற்றல் அழகும் இந்நூலினில்
அங்கும் இங்கும் எங்கும் உணர்கிறேன்-நான்
முன்னர் இதுபோல நூலைக் கண்டேனில்லை
முழுமையொன்றை இங்குக் காண்கிறேன்!

நல்ல நல்லப்பல சொற்கள் எல்லாம் தங்கள்
நாயகனைத் தேடி நின்றன-கவி
வல்லவர் கோவேந்தன், வார்த்தை அவைகளை
வாழ வைத்தார், புகழ் கொண்டன,

தோழர் இலெனினுக்குத் தமிழுலகம் தரும்
தூயபரிசு இந்நூல் என்பேன்-இது
வாழத் துடிக்கின்ற மானிடரின் சார்பில்
வழங்கிய பாமாலை தான் என்பேன்,

யாராண்டால் என்ன என்றே வாழ்ந்த மக்களை
ஊருலகம் காணச் செய்தவர்-இன்று
நூற்றாண்டு காண்கிறார் இன்னும் பல நூறு
நூற்றாண்டு காணவே வாழுவார்!

பாவேந்தர் போற்றிய கோவேந்தனின் நாவில்
பைந்தமிழ் அன்னையே வாழ்கிறாள்-அவர்
நாவேந்தி வாழ்ந்திடும் நாயகியே, நூலில்
காவேரியாய்ப் பொங்கிப் பாய்கிறாள்!

காதலைத் தென்றலைத் கன்னியைக் கன்னத்தைக்
கனிரசத்தைப் பாடும் கூட்டமே-இவர்
மேதையை வாழ்த்திய பாடலைக் கேட்ட பின்
மென்மேலும் போடுமோ ஆட்டமே!

சனவரி முதலாக திசம்பர் வரையிலும்
சந்திக்கிறோம், பல மாதமே-இதில்
எனது நண்பர் திரு. கோவேந்தனின் நிலை
இனிக்கின்ற "மே" மாதம் ஆகுமே!

தோழனைப் பாடிய தோழனே வாழிய
தூய உன் மாமனம் வாழ்கவே-என்றும்
ஆழியின் ஓங்காரம் போல நின் பாடல்கள்
வாழிய நீடூழி வாழ்கவே!

சென்னை-17
31-7-69

—சுப்பு ஆறுமுகம்

# முன்னுரை

1947-ஆம் ஆண்டில் ஒரு நாள், ஓர் அரசியல் கூட்டத்தில் பகுத்தறிவியக்கத்தைப் புரிந்து கொள்ளாத ஒருவர் ஓர் அறைகூவல் விட்டார். மறுகணமே மேடையில் ஒரு மாணவன் ஏறி ஒலிபெருக்கி முன் நின்றான். கூட்டத்தில் எங்கும் 'இலெனின்' 'இலெனின்' என்ற பெயர் என் செவி களில் ஒலித்தது. அது நாள் வரை நான் கேள்விப்பட்டிராத பெயர் அது. எந்த நாட்டினர், சமயத்தினர் அந்தப் பெயரை இடுகிறார்கள் என்றும் அறியேன். இளைஞனின் துடிப்பும் தோற்றமும், ஆர்வமும் கண்டு சூழ இருந்தவர்கள், 'இலெனினைப் பேசவிடுங்கள், பேசவிடுங்கள்' என்று முழக் கினர். இறுதியில் அரசியல் கூட்டம், இளைஞனை அமைதிப் படுத்தித் தன் அரை வேக்காட்டு அறிவை ஒத்துக் கொண்டது. இன்று வழக்கறிஞராக இருக்கும், வே. மு. இலெனின்தான் எனக்குத் தன் பெயரின் முதல் மனிதனைப் பற்றிக் கூறினார்.

பிறகு 1954-ல் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றார் ம. இலெனின் தங்கப்பா என்ற மூதறிவு பெற்ற இளைஞர். பரிசு பெறாத நானும் அவரும், "செம்புலப் பெயர் நீர்போலத் தமிழுடை நெஞ்சால் இரண்டறக் கலந்தோம். அவருடைய தோழமை யால் இலெனினைப் பற்றிய ஆர்வம் நெய்யுண்ட நெருப்பாய் மிகுந்தது. ம. இலெனின் தங்கப்பா, (தமிழ்த்துறை, தாகூர் கலைக்கல்லூரி, புதுவை) என்னையும் என் இலக்கிய எண்ணங்களையும் செம்மைப்படுத்தும் ஆன்றவிந்தடங்கிய சான்றோன். இலெனின் பெயர் கொண்டவர்களே தனி மனிதனுக்கு வழி காட்டியாக அமையும்போது வையம் வாழ வாழ்ந்த வி. இ. இலெனின் என்னும் மூல முதல்வன் சிறப்பை என்னென்று புகல்வது.

வி. இ. இலெனின் உலக மக்களுக்காகத் தன்னலம் துறந்த தொண்டன், பொதுவுடைமையின் தந்தை, உழைப்பாளர் இனத்தின் முன்னோடித் தோழன், புத்தூழிப் புரட்சியின் சிற்பி, மானுடத்தை வாழ்விக்க வந்த மாமனிதன். அவர் வாழ்வைக் காப்பியமாக்க இரண்டாண்டின்முன் துவக்கினேன். விருத்தப்பாவில் ஆயிரம் பாட்டாக்கியும் செயற்பாட்டு மனிதனின் செயல்களை முடிக்க முடியவில்லை; பிறகு தொடரலாம் என்றெண்ணி, இறுதியில், பண்ணோடிசைந்த பாடல் நூலாக இலெனின் வாழ்வை, எண்ணங்களைச் செயல் நிகழ்ச்சிகளைச் சொல்லோவியமாக்கினேன். மக்கள் தலைவனாக இருப்பதிலும் தோளோடு தோள் பிணைந்த நெஞ்சுகந்த தோழனாக இருக்க விரும்பினார் இலெனின்.

இந்த நூல் வெளிவரப் பற்பல நண்பர்கள் ஊக்குவித்தனர். அவர்கட்கும், இச்சிறு நூலுக்கு, அரிய பெரிய அணிந்துரை நல்கிய பல்கலைப்பாவலர், வில்லிசைச் செல்வர் சுப்பு ஆறுமுகம் அவர்கட்கும் நூலைச் செம்மைப்படுத்திய அருமை நண்பர் ம. இலெனின் தங்கப்பா அவர்கட்கும், அழகுற அச்சிட்டு தவிய தொழிலாளர்கட்கும் என் அன்பும் நன்றியும் என்றும் உரித்தாகுக.

இந்த நூலால், ஒரு மனிதன் சிந்திக்கும் வாய்ப்பு கிடைத்ததாக எண்ணித் திருந்தினால் அதுவே என் உழைப்பிற்குக் கிடைத்த ஊதியம்.

1-8-'69
சென்னை-24.

அன்பு,
த. கோவேந்தன்



# தோழனைப் பாடுவேன்

உலகின் தோழனைப் பாடுவேன் பொது
வுடைமைத் தந்தையைப் பாடுவேன்!
நிலமெலாம் அதன் விளைவெலாம்சரி
நிகர தாக்கி உழைப்பவர்
நலமெலாம்பெற நானிலத்தில் நாடு
அமைத்த நண்பனைப் பாடுவேன்!
இலெனின்ஆம் பெயர் கொண்ட ஏந்தலின்
இயல்பெலாம் நனி பாடுவேன்!

உழைப் பவர்க்குயிர் ஈந்தெழுச்சியை
ஊட்டினோன் திறம் பாடுவேன்!
உழைத்திடா இனம் வீழப் புத்துணர்வு
ஊற்றினோன் புகழ் பாடுவேன்!
தழைக்கும் மெய்நெறி சார் சமத்துவம்
தந்தவன் பெயர் பாடுவேன்!
விழைந்த மார்க்சிசம் வெற்றிவாழ்விடை
விளைத்த அண்ணலைப் பாடுவேன்

தொழில்எலாம், தொழில் பயன்எலாம், மக்கள்
தோழர்க்கீந்தனன்!-பாடுவேன்!
விழியினில் ஒளி, வாழ்வினில் ஒளி
வீழ்ந்தவர்க் கொளிகாட்டியே
அழிவு செய்தவர் வீழவும் உழைத்து
அடிமையானவர் ஆளவும்
வழிவகுத் துயர் உடைமையைப்பொது
வாக்கும் வள்ளலைப் பாடுவேன்!

பொதுமை நல்லறம் மானுடம் பெறப்
புதுமை மன்பதை மாளிகை
இதுவெனத் தலை வாயில் காட்டியோன்
ஈடில் அன்பினைப் பாடுவேன்!
மதுகையோடின மொழிகடந்து பல்
மக்கள் கூட்டமும், மேம்படச்
சதுரப் பாடுயர் எண்ணம் தாங்கிய
தலைமைத் தோழனைப் பாடுவேன்!

வரல் அரும் பெரு மாற்ற ஏற்றங்கள்
வகுத்தளித்துயர் சிற்பியைப்
புரட்சியில் மறு மலர்ச்சியைத் தரு
பொதுமை வீரனைப் பாடுவேன்!
பரந்த மண்ணகம் பண்புயர்ந்திடப்
பாடு பட்டவர்க் குலகென
உரன் கொள் புத்துணர்வு உள்ளம், சொல், செயல்
உவந்தளித் தனன்! பாடுவேன்!

இனப் பகுப்பெனும் சுள்ளியில் நெருப்பு
இட்ட வீரனைப் பாடுவேன்!
எனக்கு எனக்கு எனும் தன்னலத்து இடி
இட்ட ஏற்றினைப் பாடுவேன்!
அனலிடைப் புழு வாய்த்துடித்தவர்க்கு
அருள்செய் அண்ணலைப் பாடுவேன்!
மனமகிழ் சம தருமப்பூம் பொழில்
மலர்ந்திணேன் புகழ் பாடுவேன்!

முதலுளார் தமின் முது கெலும்பினை
முரித்த மல்லனைப் பாடுவேன்!
உதவுவார் தொழி லாளர்க்கே உலகு
உரிமை செய்தனன்! பாடுவேன்!
மதத்திணேர் திமிர்; மயக்கும் பொய்க்கலை
மா சொழித்தனன்! பாடுவேன்!
சுதந்திரத் தொளி வாழ்வின் பாங்கெலாம்
தோயச்செய்தனன்! பாடுவேன்!

ஆறில் ஓர்பங்கு இம் மண்ணிலே பொது
வுடைமை ஆட்சியை ஆக்கியே
வீறிடும் உழைப் பாளிக்காற்றல் சேரி
விழுதினேன் புகழ் பாடுவேன்!
கூறுமூல தனத்தினுல் வையம்
கூறுசெய் கொடியோர்களை
வேரிலாமலே செய்த எஃகுள
வீரனும் இலெனின் பாடுவேன்!

கொடுமை தீர்ந்தனன்! பாடுவேன், இனக்
கோணல் கொன்றனன்' பாடுவேன்!
நடுமை சார்ந்தனன்! பாடுவேன் பொருள்
நல்கினேன் திறம் பாடுவேன்!
கடுமை பேர்த்தனன்! பாடுவேன் செல்வரி
கருவறுத்தனன்! பாடுவேன்!
வறுமை சாய்ந்தனன்! பாடுவேன்! மக்கள்
வாழ வாழ்ந்தனன் பாடுவேன்!

'உலகெலாம் ஒரு குடும்பமாக்கிட
உறுதிதந்தனன் பாடுவேன்!
உலகெலாம் பொதுவுடைமையால் அமைவு
ஊட்டவந்தனன் பாடுவேன்!
உலகெலாம் மக்கட் குரிமையாக்குவேன்!
உணர்க என்றனன்!—பாடுவேன்!
உலகெலாம் உய்ய உலக மக்களின்
உள்ளம்வாழ் இலெனினைப் பாடுவேன்!



# இலெனின் வரலாறு

கேளீர் இலெனின் வரலாறு-இதைக்
கேட்பதும் கற்பதும் நாம் பெற்ற பேறு!
கேளீர் இலெனின் வரலாறு!

தோளின் உழைப் பிந்த உலகம்-அன்புத்
தொழிலாளர் தொண்டாலே யாவுமே நிலவும்
நாள்தோறும் நாள்தோறும் வளரும்-உயர்
நாகரிகம் உழைப் பாளரால் மிளிரும்!
ஆளும் உலகவர் கையில்-எனினும்
அடிமையாய் மாறினர், சூழ்ச்சியில் பொய்யில்,
மீளாத மக்களைமீட்டு-உழைப்போர்
விரிவுகொண்டிடச் செய்தவர் பாட்டு!

கேளீர் இலெனின் வரலாறு!

உருசிய நாட்டிற்குக் கங்கை-என
உதவிடும் தீம்புனல் வால்காவின் பங்கில்
திருவுடைச் ''சிம்பர்சிக்'' ஊரில்-கொடும்
தீமை அழிந்து நலமோங்கப் பாரில்
பெருமை சேர் அறிவுடைக்குடியில்-ஆரும்
பிள்ளையாய் இலெனின் வந்தார் பெற்றோரின்மடியில்
அருமைசார் பன்முகக் கல்வி-பெற்ற
அறுவரும் பெற்றனர் அழியாமை தள்ளி.
கேளீர் இலெனின் வரலாறு!

சுறுசுறுப் புணர்வுடன் நேர்மை-உலகச்
சூழலும் எளிமையும் புரட்சியின் சீர்மை
சிறுவராய் இருக்கையில் பெற்றார்-நல்ல
சிந்தனைச் செயற்பாடும் செம்மையாய்க் கற்றார்
வறுமையை மாய்த்துயர் மேன்மை-வைய
மக்கள் பெறச்சீறும் வீறுடை ஆண்மை
பொறுமையாய்க் கற்றஅவ் வீட்டில்-மூத்தோன்
புரட்சிக்கு வித்திட்டான் அலெக்சாண்டர் நாட்டில்;
கேளீர் இலெனின் வரலாறு!

பல்கலைக் கழகத்தில் முன்னோன்-கலை
அறிவியல் பாடம் படிக்கையில் அன்னோன்
இல்லாமை, பொல்லாங்குக் கொடுமை-சாரின்
எதேச்சாதி காரத்தின் வல்லாட்சிக் கடுமை
இல்லாமல் செய்கின்ற புரட்சி-தன்னை
இயக்கியே புயலாக ஊக்கினான் கிளர்ச்சி;
எல்லார்க்கும் இன்பங்கள் சேர்க்கும்-மார்க்சின்
இலக்கிய எண்ணங்கள் இலெனினிடை ஆர்க்கும்.

கேளீர் இலெனின் வரலாறு!

ஐயகோ அவ்வேளை தனிலே-அருமை
அத்தனை இழந்தனன் இளைஞன் இலெனினே;
"பொய்மிகு புனைசுருட் டாட்சி-தனைப்
போக்கவும் மக்கட்கு விடுதலை மீட்சி
கைவரச் செய்யவும் திட்டம்-பல
கைகொண் டலெக்சாண்டர் உழைக்கையில் சட்டம்
கைதாக்கி இட்டது தூக்கில்-அவன்
கருதினன் சாரினைக் கொலைக்கென்றசாக்கில்;

கேளீர் இலெனின் வரலாறு!

வீரனைப் போலே இறந்தான்-மூத்தோன்
வீறுற்ற புரட்சியின் தீயாய்ச் சிறந்தான்;
தீரன் இலெனினுக்குப் பாதை-அத்தீச்
செந்நீரே காட்டிற்றுப்புதுமைக்குக்காதை!
கூரம்பு போலே குறிக்கோள்-சாரின்
கொட்டம் அடக்கிடக் கொண்டனன் நெறிக்கோள்
வீரமும் விவேகமும் கூட்டிப்-பொது
வுடைமைக்கு வித்திட்டான் உலகிற்கு நாட்டில்

கேளீர் இலெனின் வரலாறு!

இளமையில் மார்க்சினைக் கற்றான்-துன்பம்
இல்லாத உலகினுக்கு எண்ணங்கள் பெற்றான்
வளமான பதினேழாம் ஆண்டில்-சாரின்
வன்மைக்குக் குறுக்கிட்டான் போராட்டத் தூண்டில்;

அளவற்ற புரட்சியின் துடிப்பால்-இலெனின்
ஆக்கினான் மாணவர் இயக்கங்கள் படிப்பால்.
"வெளியேறு" என்றது பள்ளி-ஆட்சி
வெளியேற்றி விட்டது நாட்டினைத் தள்ளி!

கேளிர் இலெனின் வரலாறு!

கோகுட்கின் என்றஅச் சிற்றூர்-புரட்சிக்
குழந்தையை ஏற்றுவளர்த்தது மற்றூர்;
ஆகும் இராப்பகல் தோறும்-இலெனின்
அறிவினில் மார்க்சிசம் படிப்படி ஏறும்!
சாகும் தொழிலாளி மீள-அவனைச்
சாய்க்கும் முதலாளிக் கொள்கைகள் மாள
ஏகும்வான் கணைநிகர் முயற்சி-பொது
வுடைமைகாய் ஏற்றனன் மார்க்சீயப் பயிற்சி.

கேளிர் இலெனின் வரலாறு!

முற்போக்கு மாணவர் வட்டம்-பின்னர்
முதலுக்கே ஊற்றான தொழிலாளர் திட்டம்
கற்பித்தான் மக்களின் நண்பன்-செயல்
காலுறத் துணைநின்றான் துயர்போக்கும் அன்பன்,
முற்போக்கின் கருத்தூட்டத் தலைவன்-மக்கள்
முன்னுள்ள சிக்கலை முறிப்பதில் புலவன்;
கற்பனைக் கெட்டாத மாற்றம்-தனைக்
காட்டினன்; நாட்டினன் நாட்டினில் ஏற்றம்.
கேளிர் இலெனின் வரலாறு! **1870–1887**

## குருத்துப் பருவ இலெனின்

பொற்கன வாயிரம் பூத்து மணப்பது
பொங்கும் இளமையிலே-நல்ல
புரட்சிக் கருத்துக்கள் புத்துயிர்கொண்டு
பொலிவதிளமையிலே!
கற்பனைக் கோட்டைகள் சாலூன்றி நின்றிடல்
காதல் இளமையிலே-உண்மைக்
காரியம், வீரியம், கல்வி, மறத்தன்மை
காட்டும் இளமையிலே;
சொற்கடக்கும் புகழ் சூழும் இலெனின் இளஞ்
சோலைப் பருவத்திலே-மனத்
தூய்மையும் வாய்மையும் சீர்மையும்கொண்டு
துலங்கினன் வாழ்வினிலே!

துன்பம் பொறுத்துநல் அன்பினைக் காட்டெனும்
தூய கிருத்துவத்தில்-இலெனின்
தோன்றலின் முன்னவர் சார்ந்து நடந்தனர்
தூண்டினர் மக்களையும்

ஒன்றும் எதிர்க்காமல் பொய்யினைப் போலியை
ஒட்ட வெறுப்பவராய்த்-தம்
ஒவ்வோர் நினைவும் செயலும் உலகிற்
குழைக்கும் உளத்தினராய்ச்
சின்னம் சிலுவை சுமந்தவன் பாங்கெண்ணிச்
சென்றதில்லை கோயில்-நினைவில்
செய்தொழில் சுத்தியும் நன்செய் அரிவாளும்
சேர்ந்து சுமப்பதுண்டு!
அன்னதோர் நாளினில் ஆரோ உறவினர்
இல்லம் அடைந்துவந்தார்-சமய
ஆசாரம் ஒன்றே உலகத்தின் வாழ்வென்ற
அற்ப நினைவுடையார்;

விருந்து முடித்து விளைந்தஅப் பேச்சினில்
கோயில் விரைந்ததுவே-அந்த
வேளையில் "பிள்ளைகள் கோயில் வெறுத்தனர்"
என்றார் மனைத்தலைவர்,
பொருந்தா மொழியைப் புகட்டுவித்தார் அந்த
மதத்தில் புதைந்தவரோ-"கோயில்
போகாத பிள்ளையைச் சாடுங்கள் போடுங்கள்
போக்குக கோயிற்"கென்றார்.

''குருத்துப் பருவ இலெனினையும் கோயிற்குக்
கொண்டு செலுத்து'' மென்றார்-இலெனின்
குமுறி ''மதவெறிக் கொள்கை மனிதனைக்
கொல்லும்'' எனத் துணிந்தான்.

தொங்கும் சிலுவையைத் தூக்கி எறிந்து
துடிப்புடைச் சிங்கமெனத்- தம்முன்
சூழ இருந்த உறவினர் பால்இனிக்
கோயில், சிலுவையெலாம்
பங்கு கொளாதெனில், பங்குகொளேன் அதில்
பாடால் உயர்வேன் என்றான்-பெற்றோர்
பாருக் குழைக்கப் பிறந்தோன் உரிமையில்
பள்ளம் பறிக்கவில்லை;
எங்கே கடவுள் எனத்தேடி ஓடாமல்
இந்த உலகமக்கள்-தமக்
கெல்லார்க்கும் செல்வங்கள் எல்லார்க்கும் இன்பங்கள்
எய்தும் வழி உழைத்தான். 1881



# காதல் நாணயம்

காதல் ஞாயிறாகும்-ஒளிப்
பண்பைக் காட்டல் ஆமோ
கோதிலாத காதல்-இலெனின்
குருப்கயாவினோடு
தோதுபட்ட தெல்லாம்-மக்கள்
தொண்டிணைப் பிலேதான்;
வீதி திரிந்த தில்லை—காதல்
விழா அயர்ந்த தில்லை.

உள்ளுயர்த்தும் கல்வி-பொது
வுடைமைக் கான கல்வி
வெள்ள நன்மையாக-நாட்டு
விழிப்பு நிலையை எண்ணி
உள்ளம் இருவர் ஒத்தார்-இந்த
உலகை வாழ வைத்தார்;
தெள்ளத் தெளிந்த அறிவால்-இருவர்
தீயும் விறகு மானூர்,

இலெனின்பாதை யோடு-மார்க்சின்
எண்ண ஒளியைப்பெற்றே
இலகும் உலக மக்கள்-தமக்
கிருவர்க்கான மக்கள்;
நலன்விளைத்து வாழ்வில்-என்றும்
நன்மை புரியலானுர்.
இலெனின் குருப்கயாவின்-நெஞ்சம்
உலகை எண்ணிவாழும்.

வாழ்க்கைத் துணைவியாகி-இலெனின்
மாசில் தொண்டில் எல்லாம்
சூழ்ந்தே இன்பங்காண்பார்-இதழின்
தொடர்பும் கொண்டுவப்பார்
ஆழ்ந்த கட்சிப்பணியில்-நதழ்தா
அனலும் கனலுமாவார்.
வாழும் இலக்கியங்கள்-கூறு
வாழ்வின் சிறப்பில் உற்றுர்.

நாணயத்தின் பக்கம்-எனவே
நதெழ்தாவும் இலெனினும்
பேணிப்புதுமை உலகம்-பொது
வுடைமைபேசும் உலகம்
காண நாளுமுழைக்கும்—நல்ல
கருத்தில் காதல் கொண்டார்.
நானிலத்துமக்கள்-எலார்க்கும்
நன்மை புரிந்து நின்றார்,

சிறையில்; மறைவில் கூட—இருவர்
சேர்ந்து வந்துயர்ந்தார்
மறைவிலாத காதல்-உலக
மக்கள் உயர்வுக்காக
முறைவு செய்த தென்பேன்-செல்வ
முதலைப் பிடியிருந்து
நிறைவு செய்தக்காதல்-தவத்தால்
நிறைவு பெற்ற தாங்கே. 1897

# இலெனின் எண்ணம்

தன்னல மற்றநல் தொண்டால்—மக்கள்
தலைமை மனிதனுக் கெய்தும்
தன்னல மற்ற சீர்த்தலைவன் -இந்தத்
தாரணிக் கொப்பிலாத் தந்தை,
மன்னல வேட்கைசார் வாழ்க்கை-இந்த
மண்ணினை மாண்புறச் செய்யும்
இன்னல எண்ணங்கள் கொண்ட-இலெனின்
ஏந்தலே தொண்டுக்குத் தோழன்!

ஆக்கத்தின் தன்மைகள் கொண்டான்-நல்ல
ஆளுமைப் பண்புடை அறிஞன்
ஊக்க உழைப்பினுல் உலகைப்-பொது
வுடைமைக் குரித்தெனச் செய்யும்
நோக்கத்தில் செயலினில் மேன்மை-தனை
நோன்பெனக் கொண்ட நல்தலைவன்
தூக்கத்திலும் தொழிலாளர்-சுமைத்
தோளுக்குத் தோள்தரும் தொண்டன்

எல்லார்க்கும் நல்லன்பு வாழ்வு-மாந்தர்
எல்லார்க்கும் இன்பங்கள், செல்வம்
எல்லாம் நிறைந்திட வேண்டும்-யாண்டும்
இல்லாமை நீங்கிட வேண்டும்
எல்லாத் தளைகளினின்றும்-மக்கள்
விடுதலை எய்திடல் வேண்டும்
நல்லவர் வல்லவர் இலெனினின்-மக்கள்
நலனுட்டம் முப்போதும் ஈதே! 1900

## சிற்பியின் கண்பட்ட சிற்பம்

தாயகத்தைக் காத்து மக்கள்
தம்குலத்தை உயர்த்த வந்த
தூயமன இலெனின் எனும் சிற்பி–தன்
தொல்லைநாட்டால் வெளியிருந்தான் ஒப்பி!

யாவரும் உடன் பிறந்தார்
யாவருக்கும் விடுதலையாம்
யாரும்சமம் என்ற பிரான்சு நாட்டில்–இலெனின்
எண்ணத் தவம்செய்திருந்தான் வீட்டில்!

காண்பவரை ஊடுருவும்
கருத்தூட்டக் கண்களுடன்
ஆண்மைமிகு கட்டழகின் எளியர்-இலெனின்
ஈடெடுப்பைக் காணவந்தார் உளியர்;

கற்பனையும் பற்றிடாத
நெற்றிஎழில் அற்புதத்தைச்
சிற்ப மாக்க வேண்டுமென்று சிற்பி-இலெனின்
செல்லுமிடம் எல்லாம் சென்றார் சுற்றி,

பாரில் இணை யற்றறிவு
பரந்துயர்ந்த நெற்றி ஆண்ம
வீரியம் மிகுந்தவடி வாகும்-பொலிவு
வேட்கைக் கெல்லாம் நல்லமருந்தாகும்.

கோடானு கோடி உழைப்
பாளர்தமக் குற்றமாந்தன்
பீடாளன் இலெனின்தனைப் பற்றி-விடாது
பின்தொடர்ந்த பிரான்சுநாட்டுச் சிற்பி,
புகல்வார்;

"பண்டைக் கால மெய்யறிஞன்
சாக்ரெடீசின் மேதைநிகர்
மண்டை நெற்றி கொண்டவடி வத்தான்-இந்த
மாண்புடைய இலெனின்படி வத்தான்!" 1907

# எண்ணப் பட்டை

வறுமையைப் புறந்தள்ளிச் செழுமை-சேர்க்கும்
வலுவார்ந்த புரட்சிசார் பாட்டாளி இனத்தை
உறுமேன்மை சரிநிகர் ஒப்பும்-பொது
வுடைமைக்குக் கால்கோளும் புதுநலப்பாங்கின்
பெறுவது மக்களின் உரிமை-அதைப்
பெறும் போரில் எனைவைத்தேன் எனும்இலெனின் காணும்
குறிக் கோட்குச் சிறைபட்ட போதும்-சிறையைக்
கொள்கைக்குச் சிந்தனைக்கூடமாய்க்கொண்டார்.

பதினான்கு மாதங்கள் சிறையில்-இலெனின்
பாதரச மாகவே செயல்பட்டுவந்தார்
சதிகாரச் செல்வர்கள் சாயப்-பாடும்
சமயங்கள், புண்மதம் தப்பெண்ணம்மாயச்
சதிராடும் ஏற்றத்தாழ்வோடத்-தனக்குத்
தந்த சிறையிலும் நூற்பல கற்பார்
நதியோட்டம்போல் கருத்தி தார்ப்பார்-தம்
நண்பர் தம் மனநிலம் பண்படநிற்பார்.

படிக்கின்ற நூல்பக்கம்தோறும்-எண்ணப்
படிவங்கள் உயர்வாக்கும் கருத்தேணியாகும்
துடி துடிப்பார் பிழை காணில்-மனம்
துள்ளுவார் எண்ணத்தில் உயிரூற்றுக்காணில்,
வெடிக்கின்ற எரிமலை போலே-புதுமை
விளைத்திட்ட விடுதலை வரலாற்றுக் கெல்லாம்
படிப்பித்த பல்கலைக் கழகம்-இலெனின்
படித் துத்தம் தோழர்க்கும் பாடங்கள் தந்தார்.

கட்சிக்குத் தொண்டாற்றும் திட்டம்-அருமைக்
கருத்தூட்டப் பரப்பும் நல் சொற்களின் செறிவும்
திட் பமாய் நுட்பமாய் அமையும்-தோழர்
தெளிவிற்கும் வலுவிற்கும் 'தீப்பொறி' தங்கும்
பற்றோடு கேட்கின்ற கேள்வி-நெஞ்சில்
பதிகின்ற ஒளிவண்ண விடையாகப் பாயும்!
பற்றிய சிறைஎன்ன செய்யும்-எண்ணப்
பட்டடை இலெனின் ஓர் உலைக்களம் அன்றோ! 1895

## பிராவ்தாவும்-இலெனினும்

தொழில்கள் அனைத்தும் மக்கட் கென்றே
துணைநின் றுற்றிடவும்
வழியும் வாழ்வும், மேல்கீழ் என்னும்
வகுப்பினை மாய்த்திடவும்
இழிமை நீங்கி வளமை மிகுந்து
பொதுநலம் எய்திடவும்
விழியின் துயர்நீர் துடைத்திட வந்தது
இலெனின்மகன் வேட்கையுளம்.

ஏய்ப்பவர் செயலும் உழைப்பவர் நிலையும்
யாவரும் கண்டுணர,
வாய்த்திறம் பேசி வஞ்சம் இழைக்கும்
போலிகள் வகைதெரியத்
தீர்ப்பிது உலகமே தீர்ப்பிது உலகே
உழைப்பவர் சேருகிறார்
சீர்ப்பொது வுடமை சேர்ந்திடும் என்றே
தெறித்தது தீப்பொறியே!

உண்மை என்னும் 'பிராப்தா' இதழால்
உலகினை அறைகூவித்
திண்மைக் கருத்தை மார்க்சின் மனத்தைத்
தெளிவுடன் தீட்டலுற்றார்;
"அண்மைப் புரட்சி ஆற்றும் கருவி
ஆதரிப் பீர்" என்பார்.
உண்மைக் குழைப்போர் உறுப்பினராகி
உறுதிசெய் வீரென்பார்.

உழைப்போர் இனத்தின் இதழ்; அறப் போரின்
உள்ளொளித் தீப்பிழம்பாய்த்
தழைத்தல் வேண்டும் முதலா ளித்துவத்
தடையைப் பேர்த்திடுவீர்
இழைக்கும் கொடுமை உறவோர் தரினும்
எதிர்த்ததை மாய்த்திடுவீர்
தழைக்கும் புதுமை தந்தவன் இலெனினின்
தாய்உள முழக்கிதுவே. 1912

## உழைப்பாளரும் இலெனினும்

உலகருக்குத் தொண்டனை இலெனினின் - எண்ணம்
ஒவ்வொன்றும் காலம் எதிர்கொள்ளும்
நலனுணர்வு, கட்டமைதி, திட்டம் - பரந்த
நானிலத்தில் இல்லாமை தீர்த்தல்
இலக்கொன்று, புத்துலகம் எய்தல்! - பொது
உடைமையால், இன்பநலம் சேர்த்தல்.
"நிலத்துழைப் பாளர் உழவோர்கள் - புரட்சி
நெருப்புக்கு விறகாவார்" என்பார்.

விடுதலைக்கோர் உந்து சத்தியாக-உழவர்
வீரர்படை முந்தவேண்டும் என்றே
கெடுதலையை மாற்றும்செங் கொடியில்-அரிவாள்
கேண்மையுறும் பொறிப்பாகச் சேர்த்தே
அடுத்துள்ள தொழிலாளிச் சின்னம்-சுத்தி
அன்பிணைப்பின் ஒற்றுமையும் கொண்டார்,
படுகொலைசெய் யும்போரை வீழ்த்த-இரண்டு
பாட்டாளிக் கூட்டம் எழ வேண்டும்,

தொழிலாள ரோடும்உழ வோர்கள்-கூடும்
தோழமையே மன்பதைமுன் னேற்றம்,
இழிவான ஆட்சியினைப் பேர்க்கும்-மக்கள்
எல்லார்க்கும் நல்லின்பம் ஆர்க்கும்
விழிப்புணர்வே மாந்தர்க்கு மேன்மை-நாட்டின்
விடுதலைக் கானவெற்றி வாயில்
உழைபவர்க் கேநிலம் உரிமை-என்று
உழவரின் நெஞ்சினிலே உழுவார்.

''சமுதாயப் புரட்சியதன் வீச்சும்-மக்கள்
சரிநிகராம் என்னும் எண்ணக் காழ்ப்பும்
குமுறி எரிமலையாய்ப் பொங்கிச்-சமுகக்
கோணல்களை வீழ்த்தியே முழங்கும்''
''அமைதியி னில்உலகை ஆளும்-தொழி
லாளருடன் பண்ணைஉழ வோரும்
கமழ்ந்தொன்றாய் வாழ்வதின்ப மாகும்''-இந்தக்
கருத்தேணி இலெனின் நிறுத்ததாகும்! 1914

# நூலகங்களில் இலெனின்

நாட்டை உலகத்தை ஒன்றிய மாக்கிடில்
நாட்டின் உடைமைகள் யாவும்-மக்கள்
யாவர்க்குமே வந்து மேவும்,—என்ற
வேட்கை மனத்தினன் செய்கை மனிதனின்
வீரப் புரட்சியைக் கண்டு—மன்னன்
வெளியேறச் செய்தான்ம ருண்டு!

பொதுவுடைமைக் கொள்கை தனிமனிதன் இன்பம்
பூத்துமகிழ்வதற் கன்று-உலகம்
புகழ் மக்கள் அனைவர்க்கும் ஒன்று
புதுமலர்ச்சிக் கொள்கை விரிமலர்ச்சிக் கின்னல்
பொறுத்திடும் தாய்க்கரு போலே-வெளிப்
போந்தனனே இலெனின் மேலே

எங் கெங்குச் சென்றாலும் "ஏழையர் வாழவே
என்னுயிர், தொண்டென்று சொல்வான்-மார்க்சின்
மூலத் தனத்தொளி கொள்வான்;
தங்கத்தைச் சூழ்ந்தாயும் சிங்க நெருப்பெனத்
தங்கையார் நண்பர் ளோடு-நாளும்
தான் கற்பான் பற்பல ஏடு.

பாரீசு இலண்டன் செனிவா எனச்சென்று
பதுங்கிய நன்னகர் தோறும்-இலெனின்
படிப்பதற் கென்றே நூல் சேரும்!
கோரிய புத்தகம் எங்கிருந் தாலும்போய்க்
கொண்டு வரச்சொல்லிக் கற்பான்-தன்
கொள்கைக்கு நீருட்டி நிற்பான்

உழவரும் செய்தொழில் வாணரும் கூடியே
உறவாய் இருப்பது போலே-இலெனின்
உறவும் அறிவார்ந்த நூலே!
பழமரம் நாடும் பறவைபோல் பற்பல
பண்பட்ட நூலகம் தேடி-தோழன்
பொதுவுடைமை தந்தான் கூடி!

"நூல்கள் நிறைந்த எழில்மனையே ஒரு
பல்கலை மன்றுக்கு மேலாம்-மக்கள்
பண்பாடளந்திடும் கோலாம்!
நூல்களே மானிட எண்ணத்தின் வைப்புகள்
நூறுநாறுண்டின் பொறிப்பாம் அறிவு
நோன்புசெய் நல்ல குறிப்பாம்!

சிந்திக்க வைத்திடும் புத்தக சாலைகள்
செம்மை மனிதரை ஆக்கும்-வாழ்வில்
சீர்திருத் தம்தனை ஊக்கும்!"
சிந்தனைச் சிற்பி நிகருடைமைக் கென்றும்
சிந்திக்க வைத்தவை நூல்கள்—ஒன்று
சேரும் மனங்களின் கால்கள்! *1914*

## போரின் மீது போர்க்குரல்

இருபதாம் நூற்றாண் டெழுந்திடும் காலை
பேரர சிரண் டாகி
இரு மனச் சிறகை விரித்துல கத்தைப்
போரின் இடமாக்கிக்
குருதியில் வாழ்வைக் குளித்திடும் திட்டம்
கொடூரத் தனமாக
ஒருபிழை அறியா மக்களைப் பலியாய்
ஊட்டிட எதிர்வந்தார்

இருபுறத் தாரும் அருள்மன மின்றிக்
கொள்ளை அடிப்பதுவும்
இருமையில் உலகை அமர்க்கள மாக்கி
இன்னலில் இன்புறவும்
கருதிய கயவர் தன்னலம் எண்ணிக்
காட்டினர் வெம்பகையைப்
பெருகிய செந்நீர்ப் பிணவுண வெண்ணும்
முதலா ளித்துவமே!

பொருள்முத லாளிபோரிடை வாழும்
புல்லுருவிக் கூட்டம்
திருடிடத் தீமை புரிந்திடத் தூண்டும்
போர்வணிகக் கூட்டம்,
அருந்தொழி லாளி நிலஉழைப்பாளி
அழித்துணும் வஞ்சகர்கள்
பெரும்உழைப் பெண்ணு துழைத்திடா துண்ணும்
பெருச்சாளிக்கூட்டம்;

ஆக்கிய போரில் அருந்தொழி லாளர்
அழிவதும் என்னமுறை?
தூக்கிய தூக்கில் தொங்குதல் இங்கே
தொழில்புரி இனத்திற்கா?
தாக்கிடும் வறுமை பயங்கர விளைவைத்
தரல் முதலாளி இனம்
ஊக்கிடும் கொடும்போர் ஆக்குவ தனைத்தும்
முதலாளிக் கூட்டம்,

என்பதைத் தேர்ந்தே உருசிய நாட்டில்
இருப்போர் அலாதபிறர்
தன்உயி ராகத் தன்னுட லாகத்
தவித்திடும் உழைப்பாளர்
கொன்றழி பட்டு முதலா ளித்தனம்
கொள்ளை அடிப்பதனை
வென்றிட வேண்டி இலெனின் மகன் உலகின்
வீரக் குரலானார்.

"தொழில் உழைப் பாளர் பொருள்அடிப் படை யைத்
துவளச்செயும் போரின்
விழிகளைப் பெயர்க்கக் கிளர்ச்சியில் திரள்வீர்
விண்கணையாய் வருவீர்,
பழிமுத லாளி பங்கினில் தீயைப்
பற்றக் கொடிதூக்கீர்
அழித்திட முடியா இனம்தொழி லாளர்
இனம்என அறிவிப்பீர்.

தன்னல வேட்கை குறுகிய எண்ணம்
உழைக்காத் தடித்தனத்தில்
மின்இடி சாய்ப்பீர், உரிமையைக் காப்பீர்
அமைதிக் குழைத்திடுவீர்,
வன்செயல் கொடியோர் போர்க்கெதிர் போரை
வரும்காலம் கருதி
இன்றுநீர் செய்வீர் ஏந்துக படைகள்
எய்துக ஒற்றுமையே.

அமைதியை உலக, ஒற்றுமைப் பண்பை
அழிக்கும் அரசுகளைக்
குமைத்திட வேண்டும், உழைத்திடும் உலக
மக்களே கூடிடுவீர்
இமைவிழி காக்கும் இயல்பினில் மண்ணில்
எவ்வுழைப் பாளர்களும்
தமைஅழித் தோங்கும் செல்வரைத் தீர்ப்பாம்
தராசினில் ஏற்றிடுவீர்."

என்றறை கூவல் எண்திசை கேட்க
இட்டனன் இலெனின்தோழன்
முன்னணி கொண்டு முதலா ளித்துவ
முகத்தில் அறைந்தாற்போல்
ஒன்றினர் வைய உயிர் உழைப்பாளர்
ஊழிப் புரட்சிக்கே
பொன்மொழி இலெனினால் புத்துயிர் பெற்றார்
பொதுவுடைமை பெற்றார். 1914

# அக்டோபர் புரட்சி

இக்கலைத் தீர்ப்பது பொதுவுடைமை! உலகில்
சேமம் தருவது பொதுவுடைமை;
மக்களைச் சேர்ப்பது பொதுவுடைமை-பொருள்
மலையைத் தகர்ப்பது பொதுவுடைமை;
தக்க உழைப்பின் அருஞ்சிறப் பைத்-தொழி
லாளர் பெறத்தரும் பொதுவுடைமை;
அக்டோபர் தந்த புரட்சிக்கொடை-மக்கள்
விடுதலைக் கச்சாரம் பொதுவுடைமை.

மூல தனத்தின் முழுப்பொருளை-மார்க்சின்
மூளைத் தடத்தின் அடிமுடியைச்
சால உணர்ந்த இலெனின் அறிஞன்-புதுச்
சமத்துவ வாயில் திறப்பதற்குக்
கோலப் புரட்சி துவக்கியதும்-அங்குக்
குமுறிய அக்டோபர் திங்களன்றோ
ஞால வரலாற்றின் ஏடுதனில்-ஒரு
திருப்பு நிலையினைத் தந்ததுவே!

ஏற்றதாழ் வற்ற பொதுவுடைமை-செல்வம்
எல்லோர்க்கும் நிறைந்த நிகருடைமை;
ஆற்றும் தொழில் செய் துழைப்பவர்க்கே-உயர்
ஆட்சியும் மாட்சியும் என்றுரைத்து,
மாற்றி முதலாளிக் கொள்கையினை-மண்ணில்
மண்ணோடு மண்ணாகச் செய்த இலெனின்
போற்றிடும் சோசலி சத்தினையே-உலகு
புரிந்திடச் செய்ததும் அக்டோபரே! 1917

## 1917 அக்டோபர் புரட்சி

நாடும் உலகமும்
நல்லபொதுவுடை மைக்கே-செல்லும்
நாள்எண்ணிப் பொறுமையின் மிக்கான்-பல
நாடு மறைந்துபத்
தாண்டுபின் தாயகம் புக்கான்

மூடும் முகில்தள்ளி
முன்வரும் ஞாயிறு போலே-இலெனின்
பெட்ரோகிராட் வந்த தாலே-மக்கள்
முற்றிய நோய்க்குநல்
மருந்தாய்க் கொண்டார்மகிழ் வாலே!

அணையைத் திறந்திட்ட
அன்பார்வ வெள்ளத்தை ஒத்து-இலெனின்
ஆவன செய்யத்து டித்து-மக்கள்
ஆற்றலைச் செய்முறை
யாதெனச் சொன்னான் தொடுத்து!

பிணைப்புகள் நீங்கிடப்
பேயர்கள் சாய்ந்திடக் கூட்டம்-கூட்டி
''ஏப்ரலின் ஆய்வுரை'' ஊட்டம்-தந்து
பேசும் புரட்சியில்
முன்வைத்தான்! அமைதிமேல் நாட்டம்

உள்நாட்டு மாற்றத்தில்
ஒவ்வொன் றிலும்தொழி லாளர்-நாட்டை
ஆண்டிடும் நல்ஆட்சி யாளர்-எனும்
உண்மையை வேண்டினார்
உலக அமைதியின் தோழர்!

கொள்ளை அடிப்பவர்
கொள்ளவில்லை இதை விட்டார்-இலெனின்
கொள்கைவிதையினை நட்டார்!-உழைக்கும்
கூட்டத் துறவினர்
கொந்தளித் துணர்ச்சி பெற்றார்!

தீயரின் கண்களும்
தீச்செயல் கைகளும் நாடி-இலெனின்
செத்தால் பிழைப்போமென் றுடி-வழக்குத்
தீட்டினார்; ஆனாலும்
சென்றதுவே வானம் பாடி!

போய் விழிக் கெட்டாமல்
புள்மறைந்திட்டாலும் பாட்டு-செவி
போந்த மகிழ்வுபோல் நாட்டுப்-புரட்சிப்
புத்துணர்ச் சிக்சனல்
பொங்கும் இலெனின் மொழி கேட்டு!

அமைதி விரும்பாமல்
அமர்க்களத் தால்பலன் கிடைக்கும்-என்ற
ஆணவக்காரர் படைக்கும்-தொழி
லாளர் படைத்திறன்
நப்பெண்ணம் தன்னை உடைக்கும்!

இமைதிறந்தி மைக்குமுன்
ாங்கும் உழைப்பாளர் கூட்டம்-கிளர்ந்த
ரழைக்கும் செலவர்க்கும் மூட்டம்-சாரின்
ாத்தர்கள், பித்தர்கள்
ாடுபிடிகள் கொண்டார் ஓட்டம்!

உழும்நிலம் உழவர்க்கே
தொழிற்சாலை தொண்டர்க்கே என்றார்-எழுந்தோர்
ஒற்றுமை யாகவே நின்றார்-வந்து
ஓடினார் 'மைய'த்தார்
ஓட்டினார் போலியை வென்றார்!

எழுந்தது செங்கொடி
எங்கெங்கும் புரட்சியின் பாட்டு-வெற்றி
ஏழை எளியர்க்குக் கூட்டு-தமை
எதிர்த்த வருக்கெல்லாம்
இட்டார் சிறைச்சாலைப் பூட்டு!

உழைக்கும் மனிதர்முன்
உழையா மனிதர்கள் எங்கே—புரட்சி
ஓங்கியதால் பிணப் பங்கே-கொண்டு
ஒப்பி முழங்கினார்
உடைமை பொதுவெனும் சங்கே!

தழைக்கும் மரத்திற்குத்
தண்ணீர் நிலம் ஊட்டல் போலே-இலெனின்
தலைமறைத் தெண்ணத்தி னாலே-கிளர்ச்சி
தப்பின்றி வெற்றிக்குத்
தந்தார் ஒளிமழைப் பாலே!

''ஆண்டது போதும், யாம்
மாண்டது போதும் சார் அரசே''-என்றே
ஆர்த்தார் தொழிலாளர் முரசே—மக்கள்
ஆறு சமைத்தது
மக்கட் கடல்குடி யரசே!

நீண்ட கதிர்களால்
நீணிலம் ஆண்டிடும் ஒளிபோல்-வாழும்
நிலத்தை உயிர்ப்பிக்கும் வளிபோல்-இலெனின்
நெஞ்சின் கனவினை
நிலைக்கச் செய்தான் சிற்பி உளிபோல்!

சாரின் குடும்பமும்
சார்ந்தபுன் செல்வரும் மடிந்தார்-நாட்டில்
எல்லார்க்கும் இன்பம் விடிந்தால்-உலகின்
சஞ்சலக் கண்களால்
சாம்ராச்சிய மன்னர் நொடிந்தார்.

வேரும் உலர்ந்தது
முதலாளித் துவம்எனும் மரத்தில்-உடல்
வேர்த்தது செல்வர் உரத்தில்-இந்த
விந்தை எல்லாம் செய்தார்
வையம் புகழ்இலெனின் புறத்தில்!

முடியர சாடிற்றுக்
குடியரசேறிற்ற -மாற்றம்-மார்க்சின்
மூலதனத்திற்கே ஏற்றம்-கொள்ளை
முதலாளிக்கொள்கைக்கு
முன்னே எழுந்தது கூற்றம்!

அடிமைகொண் டார்மாள
அடிமையுண் டார்ஆள வந்தார்-பொது
வுடைமை அரசைஉ வந்தார்-மக்கள்
அனைவரும் சரிநிகர்
உழைத்துண்போம் என்றுசி றந்தார்!

பொது மக்கள் கூடினர்
புரட்சியிற் கண்டனர் வெற்றி- இலெனின்
புத்தொளி எண்ணத்தைச் சுற்றி-வரும்
புத்துல குக்கொரு
புத்துயிர் ஈந்தது முற்றி!

பொதுவுடைமை என்னும்
புத்துணர் வூட்டத்தால் வையம்-இன்பம்
பூத்துக் குலுங்கிடச் செய்யும்-வழி
போந்ததினுல் இனிப்
பூரிக்கும் ஏதில் ஐயம்?

தொழிலாளர் வாழிய
படைவீரர் வாழிய வாழி-நிலத்
துழைக்கும் உழவர்கள் வாழி!-மக்கள்
தோற்றிய வீரத்தின்
தூய்மைப் புரட்சியும் வாழி!

செழிக்கும் அமைதியில்
வையம் சிறப்புறும் வண்ணம்-இலெனின்
செப்பவந்தார் செயல் எண்ணம்-உலகில்
செப்பும் மொழியெல்லாம்
சேர்ந்தால் இனிக்கும் எப் பண்ணும்!

செல்வமும் ஆட்சியும்
கல்வியும் ஓர் சிலர்க் கென்னும்-கொள்கை
செத்தழித் தெல்லார்க்கும் என்னும்-புரட்சி
செய்த இலெனினுக்குச்
செய்நன்றி உலகென்ன எண்ணும்!

பல்லோர் இறந்தனர்
பாட்டாளி ஆண்டிடப் போரில்-பொது
வுடைமை நிலத்திடப் பாரில்-அவர்
பாய்ச்சிய செந்நீரே
பயன்தரும் மானுட வேரில்! 1917

# முன்னாள் பாடும்-
# இந்நாள் பாட்டும்

முன்னாள் கொடியவர் எம்மை வதைத்தே
எம்மால் உயிர்வாழ்ந்தார்-எம்
முதுகிலிருந்தே மூலத் தனத்தின்
முதலை விலைகொண்டார்!

இந்நாள் கொடியார் இடுப்பொடி பட்டார்
எங்கள் தலைவர் இலெனின்-யாம்
யாரென் பதனை எமக்கறிவித்தார்
எழுந்தோம் விழிப்புற்றே!

முன்னாள் அஞ்சியே தாழ்ந்து கிடந்தோம்
முணுகவும் குரல்அற்றோம்-கொடு
முதலாளித் தனப்பேரிடர் இராப்பகல்
முட்டி முடக்கிற்றே!

இந்நாள் மகிழ்வால் தலையை நிமிர்த்தி
இலெனின் மனம் காட்டும்வழி,-கொடும்
இடியை எதிர்த்து மின்னல் பொடித்தே
இன்பங் காணுகிறோம்!

முன்னாள் உணவில், செந்நீர் வறுமைக்
கறைபட மொய்த்துண்டோம்-யாம்
முகந்துண் டோம்விழி நீரினை அந்தோ
முடியரச டியுண் டோம்.

இந்நாள் புரட்சியின் இன்னொளி மகளால்
எம்கைப் பயன் உண்டோம்-உடைமை
இல்லார் என்ற மொழியே இலாமல்
இளவேனில் ஆனோம்!

முன்னாள் விதியின் பகடைகள் ஆனோம்
முதல்வனின் ஊழ்என்றோம்-மத
முதலைகள் உண்ணும் உணவாய் நின்றோம்
முடமானோம் அறிவில்.

இந்நாள் விதியின் எழுத்தைச் சிதைத்தோம்
மூலதனப் பொருளாய்-யாம்
இவ்வுலகத்தில் புதுமைகள் கண்டோம்
எம்வழி விதிவருமால்!

முன்னாள் கோயிலில் முரசு முழக்கி
இறையின் மொழிகேட்டோம்—ஆளும்
முடியர சேந்தி அடிமைக ளாகி
முயற்சியைக் கைவிட்டோம்!

இந்நாள் நெஞ்சில் துணிவை முழக்கி
இமைஇருள் நீங்கிஒளி—தனை
ஈந்தநல் அண்ணலைக் கடவுளாய்க் கொண்டோம்
எம்உளக் கோயிலிலே!

முன்னாள் பண்ணையர் முன்பு பணிந்து
முதுகில் சுமந்தோமால்-அவர்
மூட்டிய வறுமையில் அறியா மைப்புகை
மூழ்கி நலிந்தோமால்.

இந்நாள் கூட்டுப் பண்ணையில் அனைவரும்
உரிமையின் இன்புற்றே—கல்வி
ஏடுகள் கண்டோம், அறிவை மணந்தோம்
எல்லாம் எமக்குற்றோம்

முன்னாள் போலிகள் செல்வர்கள் தம்மின்
மொழியை மதித்திட் டோம்-பாழ்
மூடத் தனத்தில் மூழ்கி உவந்து
முன்னறி வற்றிட்டோம்.

இந்நாள் தளையை அறுத்தெறிந்தோம் வரும்
இடையீட் டாளர்இலை-கலை
எமையும் வளர்த்துத் தானும் வளர்ந்திடும்
இலக்கியச் செல்வத்தால்!

முன்னாள் துன்பப் பிடிப்பில் இருந்தோம்
மூதுல கின்பங்கள்-கொடும்
முதலாளிக்கே முதலாய் நின்றன
முறைமை மாறவில்லை.

இந்நாள் இயற்கை எம்மில் இணைந்ததே
எழில், இசை பெறுகின்றோம்-ஓர்
ஈடிணை இல்லா உழைப்பின் செழிப்பினை
இயல்பாய் நுகர்கின்றோம்!

முன்னாள் ஏய்ப்பவர் கல்லறை வாழ்ந்தோம்
மூச்சுப் பேச்சற்றோம்-வெறும்
நடைப்பிண மானோம் மொய்ம்பு தளர்ந்தோம்
முள்ளில் முடக்குற்றோம்,

இந்நாள் செல்வம் எல்லாம் பெற்றோம்
எண்ணச் சிறகுற்றோம்-ஆண்பெண்
இவ்வுல கிருந்து விண்ணுல காளும்
எழுச்சியின் வாழ்வுற்றோம்!

முன்னாள் எண்ண ஊற்றினை எம்முள்
கண்டும் மொழிந்தறியோம்- பெரும்
முந்நீர் மடியில் முத்தென வாழ்ந்தோம்
முன்முகம் வந்தறியோம்.

இந்நாள் எண்ண முத்தினை, ஊற்றினை
யாவரும் இன்புறவே-வழங்கி
ஏமுறு கின்றோம் எம்எண் ணக்குரல்
எங்கும் ஒலித்திடவே! *1917*

## புரட்சி, புதுமை விளைத்தது

புரட்சி மலர்ந்தது, புதுமை விளைந்தது
பொதுமை அறத்தின் அரசாட்சி
திரட்சி கனிந்தது திட்டம் செழித்தது
சீராய் நின்றது செஞ்சேனை
மிரட்டும் நாற்புற நாடு வியப்புற
மேலோன் இலெனினின் அறிவாட்சி
இரவும் பகலுமே எண்ணப் பொலிவுடன்
எழுத்தும் பேச்சும் செயலாச்சு,

பற்றுக் குறைபல துறையில் இருந்துமேல்
பற்றிப் பின்னும் பலகூட்டும்
வெற்றிக் கொடியினர் வீரர் உரைவழி
உழைத்தார், விளைவை விடுதலையின்
பற்று வரும்புது நாளைப் பெறும்அரும்
பாரே வியக்கும் பொதுவுடைமை
முற்றும் தமதுயர் கனவு செயல்படும்
முனைப்பில் மக்கள் செயல்பட்டார்.

நாட்டின் படைபலம் இலெனினின் மனபலம்
ஆற்றல் அறிவு நாட்டியதே!
நாட்டின் வறுமையை ஓட்டும் உணவென
இலெனினின் துணிவை நம்பினரே.
நாட்டின் உழவர்கள் தொழிலில் பிணைந்தவர்
இலெனினின் விருப்பாய் நடந்தனரே,
நாட்டின் ஒற்றுமை இலெனினின் கடும்உழைப்
பெங்கும் நன்மை விளைத்ததுவே!

ஒய்வை ஒருபுறம் வைத்தார் உருசிய
நாட்டால் உலகில் ஒற்றுமையின்
தாய்மை நிலையினைத் தாங்கிப் புரட்சியின்
தன்மைப் பண்பை உணர்விக்கும்
தூய்மை மிகுந்தவன் தொண்டில் இலக்கியத்
துருவச் சுடராய், அயராமல்
வாய்மைப் பொதுநலம் வாழும் உலகுறச்
செயலில் வாழ்ந்து காட்டினனே! *1918*

# இலெனின் மாண்புளம்

கிரெம்ளின்—

முடித்தி ருத்தகம் ஒன்றினில்-மக்கள்
மொய்த்து வரிசையில் காக்கையில்
இடியின்றி யேவரும் மாமழை-என
இட்டடி வைத்தனன் மாமகன்;
முடியர சாட்சியை வீழ்த்தியே-பொதுக்
குடியர சாட்சியைத் தந்தவன்.
"இறுதியில் நிற்பவர் யாரென"—இலெனின்
இன்னகையோ டங்குக்கேட்டனன்.

புத்தர சாங்கத் தலைவனைச்-சிறு
போதும் நிறுத்த மனமின்றி
ஒத்த குரலினில், நின்றவர்-''ஐய
உமக்குப்பின் யாமிருந்தேகுவோம்
நிற்கப் படாது நீர்'' என்றனர்-இலெனின்
நெஞ்சு கந்தே, ''நன்றி, நண்பரீர்
தக்க தன்றே முறை மீறுதல்-ஒழுங்கு
தவறுதல் நம்மை அழிப்பதாம்.

''மக்களுக் காகவே சட்டங்கள்-அவற்றை
மதித்து நடப்பதே மாண்பறம்
மிக்க பெரும் பணி யாயினும்-வாழ்வில்
மேவும் சிறுபணி யாயினும்
தக்க ஒழுங்கு முறைகளை-நாம்
தவற விடல் தவறு'' என்றனன்
மக்கள் தலைவன் மொழியினைச்-செவி
மாந்திய மாந்தர் வியந்தனர்.

வரிசையிலே ஒரு நன்மகன்-விழி
மல்கிய நீருடன் பேசுவான்
''அரிய தலைவ! இவ் வரிசையில்-இனி
அடுத்து வருவதோ என் முறை.
என்முறை தன்னை நீர் கொள்ளுவீர்-உளம்
ஏந்தும் அன்பால் இதை வேண்டினேன்
இன்னும் ஐந் தாண்டுகள் ஆயினும்-காத்
திருந்து வருமுறை கொள்ளுவேன்.

என்றன் முறையை நீர் கொள்வதால், தங்கள்
இறுதி இடத்தில் நான் நிற்கிறேன்,
ஒன்றும் ஒழுங்கிற்குக் கேடில்லை.-பிழை
உண்டு கொலோ, இதில்?'' என்றனன்
நன்றிது! நன்றிது! என்றனர்-பிறர்
நல்லன்பு கொண்டேற்கக் கூறினர்
ஒன்றிய அன்பின் உறுதியை-இலெனின்
ஒப்பாமல் ஒப்பியே ஏற்றனன். 1918

# சுடப்பட்டார் இலெனின்

கிட்டிற்று வெற்றிஎன் றெட்டிற்று காதினில்
கிழக்கிலும் மேற்கிலும் எங்கும்-செல்வக்
கேடர்தம் நெஞ்சங்கள் பொங்கும்.

விட்டுவிட்டால் நாளை வெட்டுப்படும் தத்தம்
கொற்றங்கள் முற்றிலும் என்றே-அரசுக்
கூட்டம் நடுங்கிற்று நின்றே.

திட்டமிட்டார்; இலெனின் பட்டுவிட் டால்புவி
வேட்டைக்கா டென்றேசி ரித்தார்-கொலைக்குத்
தீயர் வலைதான்வி ரித்தார்.

கெட்ட புத்திக்காரர் பற்பலர் கூடிஓர்
கீழ்மகள் தன்னைப்பி டித்தார்—உலகக்
கேள்வன்மார் பில்குறி வைத்தார்

பட்டாரி இலை இலெனின் துட்டர்க்குச் சாவோலைப்
பாட்டை எழுதப் படுத்தார்-செய்தி
கேட்டோர்நல் ஆவிது டித்தார்

எட்டுதிக்கும் முற்றும் முட்டிய செய்தியால்
கிட்டினர் சோவியத் மக்கள்-இலெனினை
எட்டவிலை நோயின் சிக்கல்!

முற்றும் உடல்பொருள் ஆவியைப் பெற்றதாய்
நாட்டுக் குழைத்தவன் நன்றாய்-நலம்
முற்றுக என்றனர்-அன்பாய்!

நல்ல நினைப்பன்றி நல்ல செயலன்றி
நாடா இலெனின்நலம் முற்றி—மக்கள்
நம்பிக்கைக் கீந்தது வெற்றி!

பொல்லா உலகத்தை இல்லாமல்செய்தவன்
புல்லினன் மக்களி னோடு-சாவும்
பொய்த்தது புண்கண்ட தோடு,

பழைய மரபுகள் அழியப் புதியதோர்
பண்பாட் டுடைமையைத் தந்தோன்-பொது
வுடைமையால் பாரில்உ வந்தோன்

நுழைவனோ சாவூர்;பி ழைத்துல காண்டிட
நோயற் றினிச்செயற் பாடு-தனது
நோன்பென் றெழுந்தான்பிற் பாடு 1918

# போர் முனையில் இலெனின்

“கிழக்குப்போர் முனை வாழும் செஞ்சேனை வீர,
கீழ்நிலை மேல்நிலை தளபதி தீர!
வழங்கிடும் ஆணைகள் யாவையும் பெற்று
வன்மையை இரும்புப் பிடியாகப் பற்று!

செஞ்சேனை முன்னுள்ள சீரான திட்டம்
செயல்பட்டு யாவையும் ஈவதே சட்டம்!
நெஞ்சுள்ள துணிவினை உறுதியை முற்றும்
நாட்டுக்கு நீஈக வெற்றிகள் கிட்டும்!

ஒழுங்கிற்கு முரணனப் போக்கினைத் தள்ளி
ஊட்டுக பகைமையில் குற்றத்தீ அள்ளி!
இழக்க இருப்பதும் ஒருயிர் ஆகும்
தன்னாட்டுக் கில்லாயின் புகழன்றோசாகும்!

போரை விரும்போம்நாம்; போக்கிலிக் கூட்டம்
புரட்சிப்போர் கண்டேதான் நிறுத்திடும் ஆட்டம்!
சாரை அழித்தது நாடாள அல்ல
சரிநிகர் எண்ணத்தைப் புத்தூழி வெல்ல''!

என்றுரைப்பார் இலெனின் இரக்கத்தின் எல்லை
என்னென்பேன் என்னென்பேன் சொற்களே இல்லை,
''அன்பான தொழிலாளர் நிலம்உழைப் பாளர்
ஆட்சியைக் காக்கவே சாவார்திண் தோளர்

போர்முனை நின்றிடும் வீரரின் துன்பம்
புகலும் மொழிக்கில்லை; நாம்படும் துன்பம்
வீரரின் தொல்லைமுன் எண்ணிடில் இன்பம்;
வீரமே வாழ்வென்பார்'' இலெனின்மொழி என்றும்!

***1918***

# இலெனினும் மாதரும்

"எண்ணும் எழுத்தெனக் கண்ணும் ஒளியென
இங்குறும்-உயர்
பெண்ணின் துணையின்றிப் பங்கின் பிணைப்பின்றிப்
பேரறம்-இந்த
மண்ணில் விளைவதும் இல்லை உலகே நீ
மாதரார்—தமை
எண்ணும் செயலொடும் ஏற்றம் புரிந்துயர்வு
எய்துவாய்

சோவியத்து நாட்டின் விடுதலைப் போரில்
துடிப்புடன்—மாதர்
ஆவியைத் தந்தார் அனைவரும்; இன்பப்
பொதுமையை-அறை
கூவும் அரசுதன் ஆணவம் மாய்த்துத்தம்
கொள்கையில்-வான்
மேவும் கனைஎன வெற்றிபெற்றார் பெற்றார்
விருதுகள்.

மாதரார் பங்கு புரட்சியில் இல்லெனின்
மண்ணினில்—இன்று
ஓதரும் புத்தொளி, மார்க்சின் கனவுகள்
ஓங்குமோ-இலெனின்
ஆதர வீந்து மகளிர்சமநிலை
ஆற்றலைக்-காட்டக்
காதல் மனையுடன் தொண்டில் கலந்தனர்
வென்றனர்.

"வீட்டக வேலையால் பெண்கள் சிறப்பற்றார்
வீரமும்,-தமது
நாட்டுக் குழைத்திடும் ஆற்றலும் கெட்டனர்
நானிலம்-ஆண்பெண்
கூட்டில் நடைபெறும், கொள்ளும் உரிமையின்
கோடுகள்-வேறு
பாட்டில் இருந்திடில் பண்புகெடும் என்பார்
நம் இலெனின். *1918*

# தன்னல மற்ற தலைவன்

மக்களை மக்களே ஆள்வதுவும்-பொது
மக்களுக் காட்சி அமைவதுவும்
தக்க பொதுமை நலன் பெறலும்-புரட்சி
தந்த இரண்டாண் டளவினிலே;

பற்றாக்குறை ஒன்று தோன்றிடவே-அதில்
பட்டு வருந்தினர் மக்களெல்லாம்,
உற்றதம் தொல்லை நடுவினிலும்-மக்கள்
உள்ளம் தலைவனை எண்ணியதே.

பஞ்சம் தலையங்கு வாட்டிடினும்-தம்மைப்
பாரில் உயர்த்திய வி இ. இலெனின்
நெஞ்சம் மகிழ உழவர்களும்-படை
வீரரும் நீட்டினர் தின்பண்டங்கள்

"தனிப்பட இலெனினுக்" கென்றெழுதிப்-பண்டம்
சார்ந்தது கிரெம்ளின் நகரிடையே
மனிதாபி மானத்தின் பண்பாளன்-இலெனின்
மக்கள் கைம் மாறெதிர் நோக்குவனோ?

நாளை உலகுக் குயிர் வழங்கும்-புது
நாட்டின் குழந்தைகள் கற்கும் கல்விச்
சாலைக்குப் போக்கினன் அவ்வுணவை!-மருந்துச்
சாலைக்கும் போக்கி உவந்தனனே!

வீட்டினில் நாட்டினில்போதாமை-தன்
வெங்கைகள் நீட்டி வளைக்கையிலே
நாட்டின் தலைவன்தான் மட்டும்நலம்-கொள்ள
நாடுவனோ? மக்கள் நண்பனன்றோ! 1919

# தொண்டர்க்குத் தொண்டன் தலைவன்

ஊதியம் கொள்ளாமல் நல்கும் உழைப்பினில்
நாட்டி ளைஞர் வருக-என
ஓதிய விண்ணப்பம் சோவியத் நாட்டினில்
உற்றெழுந்தோடியதே.

வேலைநேரம் போக மிகுந்த பொழுதினில்
வெற்றிக்குவித்தி டுவார்—நாளின்
காலையில் மாலையில் காசற் றுழைப்பில்
கடமை மகிழ் வடைந்தார்!

பல்லாயி ரக்கணக் காஞேர் உழைத்தனர்
சோவியத் வெற்றியின்பின்—ஆண்பெண்
எல்லாம் இணைந்தனர் நாட்டின் தலைவர்
இலெனினும் இருந்தாரே;

உழைப்பவர்க்கே உண்ண உரிமையுண் டென்ற
உயர்ந்த குறிக்கோளை—மண்ணில்
பிழைபடுத்தா வண்ணம் பெரிதுழைத்தார் இலெனின்
பேருள்ளப் பீடிதென்னே!

தொண்டனில் தொண்டன் தலைவன் என்ருல் மக்கள்
தொண்டுக்கு முன்வருவான்-இந்தக்
கண்டத்தில் சொற்படி செய்த இலெனின் மகன்
கற்புளம் வாழ்த்திடுவோம்! 1920

## பொதுவுடைமையாளன் நாட்டின் பொதுப் பொருள்

சோவியத் வெற்றியின் பின்-உரிமை
துளிர்த்து மலர்கையிலே
ஆவி உடல் பொருளை-நாட்டின்
உடைமை எனஅளித்துக்
கூவிய இலெனின் குரற்கு-எதிர்
குரல்கொடுத் தீந்தவருள்
மாவலி சூர்யூப்பா-உடல் நலம்
வாடப் புறக்கணிந்தார்.

நாடெனும் பொன்னுடலில் தொண்டர்கள்
நாடி நரம்பலரோ
வாட விடுவதுண்டோ-இலெனின்
"வாரும் நீர் என்றழைத்துக்
கூடப் பிறந்தவன் நீ-புரட்சிக்
குயிரைக் கொடுத்தவன் நீ
நாடும் பொதுவுடைமை-ஆளன்
நாட்டின் பொதுப்பொருள் ஆம்,

நாட்டின் பொதுப்பொருளை-வீணே
நலிய விடலாமோ
ஊட்ட மிகும் உணவை-உண்டு
உவப்பில் உவந்திடுவாய்"
காட்டிய இம் மொழியால்-விழிக்
கண்ணீர் துளிர்க்கிறதே
நாட்டன்பு என்பேனு-மக்கள்
நலனூட்டம் என் பேனே? *1920*

## தொழிலாளரிடை இலெனின்

புரட்சிக் குழைத்தீர்கள் இரத்தம் சொரிந்தீர்கள்
புத்தாட்சி பெற்றேமினி—நாட்டில்
வரட்சிக் கிடமின்றி உழைப்பின் வளம்யாவும்
வாழ்வில் நுகர்வோம் நனி!

பொய்மை புறங்காட்ட மெய்மை தலைதூக்கப்
பொதுமை நிலம் தொழில்கள்—ஒரு
செம்மைச் செயலூட்டி நம்மைப் பிறர்கண்டு
திகைத்திடச் செய்வீர் பணி!

ஆலை இயக்குவீர் சாலைதிருத்துவீர்
ஆற்றில் அணைகட்டுவீர்-நாட்டின்
மூலைமுடுக் கெல்லாம் மின்சாரம் ஊட்டுவீர்
முன்னேற்றம் நாம் காணவே!

உற்பத்தி காட்டுவீர் ஒற்றுமைக் கூட்டிணுல்
ஊழிப்புரட்சிப் பயன்-வெறும்
கற்பனைப் பாடில்லை உழைப்பேதான் செல்வங்கள்,
காண்பீர் உழைப்பின் பயன்.

உற்பத்திப் பண்டங்கள் ஆக்கிக் குவிக்கின்ற
உங்களுக்காகும் தொழில்-நாட்டின்
வெற்றிக் கெல்லாம்முதல் பாட்டாளி ஆவதால்
வீணருக் கில்லை இடம்.

வாய்த்த விடுதலை வாழ்வின் நலன்களின்
வாய்ப்பைச் சமன்கொளவே-உழைப்பின்
தீர்ப்பை மதிக்கின்ற நேரம் இதுவாகும்
செய்தொழில் கொள்ளுகவே!

''ஒவ்வொரு வர்க்கும் அவரவர் ஆற்றல்
திறத்திற் குகந்த படி-மற்றும்
ஒவ்வொரு வர்க்கும் அவரவர் தேவைக்கு
வேண்டும் உரிமைப்படி''!

கொள்ளுக செல்வங்கள் எய்துக இன்பங்கள்
கூறும் பொதுவுடைமை-தரும்
கொள்கை இதுவாகும் நாளை உலகத்தின்
கூற்றும் இதுவாகுமே!

1920

# தன்னை மறக்காத தலைவன்

"இலெனின் பிறந்தார் இலெனின் பிறந்தார்
இல்லாமை போக்க-மக்கள்
கல்லாமை போக்க-நாட்டின்
பொல்லாமை போக்க!

இலெனின் பிறந்தார் இலெனின் பிறந்தார்
தொழிலாளர் மீள-நிலத்தின்
உழவாளர் ஆள-செல்வக்
கொழுப் பாளர் மாள!"

''இலெனின் பிறந்தார் இலெனின் பிறந்தார்
பொதுவறம் காண-அறிவுப்
புதுமைகள் பூண-அரசர்
மதுகைகள் நாண!

இலெனின் பிறந்தார் இலெனின் பிறந்தார்
இழிவுகள் தீர்த்தார்-மக்கள்
மகிழ்வினில் ஆர்த்தார்-பொதுமை
உலகினில் சேர்த்தார்''

எனப்புகழ்ந்தார் இசைமனத்தார்
எல்லோரும் கூடி-தோழன்
வல்லாண்மை பாடி-விழாச்
சொல்லார்ந்த தோடி!

வினவினர் இலெனின் வினவினர் இலெனின்
''விழா எடுத்தீரா-எனக்கு
இழவெடுத்தீரா-இல்லை
பழிகொடுத்தீரா?

வீடு நலம்பெற நாடு நலம்பெற
வேட்கை யுற்றிடுவீர்-நாட்டின்
ஆட்சி கற்றிடுவீர்-திட்ட
மீட்சி பெற்றிடுவீர்!

பாடும் விழாவெது? கூடும் விழாஎது?
பாடு படுதல்ஒன்றே-நமது
நாடு உயர்வதொன்றே-புதிய
ஏடு திறப்பதொன்றே;

"என்று பிறந்தாலென்? எங்குப் பிறந்தாலென்?
தொண்டுக்கு நான்பிறந்தேன்-மக்கள்
தொண்டுக் கெனைத் துறந்தேன்-நாட்டின்
தொண்டிலெனை மறந்தேன்!"

என்று முழங்கினார் கிண்டல் துவக்கினார்
ஈடில் அருந்தலைவன்-புதுமை
பாடிய நற் புலவன்-பொதுமை
கூடிய நுண் கலைஞன். 1920

# செயல் மனிதன்

உலக வரலாற்றைத்-தந்த ஓர்
ஒப்பில் எழுத்தாளன்
பலப் பலக் கதைகள்-அறிவியல்
பங்கில் வரைந்தவனும்,
புலவன் எச். சி. வெல்சு—ஒருநாள்
புத்துலகம் சமைத்த
அலகி லாப்புகழோன்-இலெனினைக்
கண்டுரை யாட வந்தான்.

மனிதப்பண் பாளனை—மாசற்ற
மாண்பு மிகுந்தவனைக்
கனிவு மிகுந்தவனைப்—பிறர்நலம்
காணும் பெருந்தகையைத்
தனிப் புரட்சிக் கப்பல்-தனக்
குற்ற தலைமையனைக்
'கனவு காண்பவரே—இலெனின்', என
வெல்சு கழறினனே.

''நாட்டைமின் சாரமயம்—ஆக்கல்
நல்ல துணிவெனினும்
ஏட்டில் இனித்திடலாம்-செயலில்
எப்படி ஆகிவரும்?
தீட்டும் இந்தத்திட்டம்—அரிய, மின்
சாரக் கனவுகைம்''
கேட்டார் இலெனின் சிரித்தார்—வெல்சு
கிண்டலை நாணச் செய்தார்.

''ஆண்டுபத் தானவுடன்-வெல்சே
ஆவலுடன் வருக!
மீண்டும் வருகையிலே—எங்கும்
மின்சாரமே விளங்கும்
யாண்டும் இலாவளர்ச்சி- உருசிய
நாட்டில் இனிதுறுமே''
வேண்டிய இம்மொழியே—பிறகு
வெற்றியைக் கூட்டியதே! 1920

# உழைப்பை ஊக்கிய ஒருவன்

உழைப்பே உயிர், உழைப்பே உடல்
உழைப்பே உல காகும்,
உழைப்பே செழிப் புழைப்பே புகழ்
உழைப்பே நல மாகும்,
உழைப்பே அறம், உழைப்பே பொருள்,
உழைப்பே உயர் இன்பம்
உழைப்போன் உண உண்ணும்உயர்
உரிமைதனை உற்றோன்.
தோ. 6—623

உழையாதவர் உலகில் பெரும்
சுமையே பயன் அற்ருர்,
உழையாதுணும் முதலாளிகள்
உதவாக்கரை இனமாம்,
உழையாதவர் போருக்குயிர்
ஊட்டும் வெறி நாய்கள்,
உழையாதவர் மாள்வார்; உழைப்
பாளர் உலகாள் வார்.

ஓடும்வரை நிற்கும் ஒரு
மிதிவண்டியின் வட்டம்,
கூடும்பலன் ஆதாயமும்
கொள்ளும் வரை செல்வர்
நாடும் தொழில் நிற்கும் பலன்
நாடல் உயிர் நாடி;
தேடும்பொது வுடமை, தொழி
லாளர்புறம் சேரின்
வாடும்நிலை போகும்நலம்
வாழும் என்பார் இலெனினே! 1921

# ஓருலக மாரி

ஓருலகம் அன்புச் சீருலகம் கண்ட
பேரறிவாளனின் அழைப்பு-இலெனின்
உள்ளம் உரைசெயல் உழைப்பு—எங்கும்
காரிருள் போக்கிற்று; இன்னொளி கூட்டிற்று
கற்பனை போலெங்கும் தழைப்பு.

போருலகம் அற்றுப் பொன்னுலகம் பெற்றுப்
பூரித்துவந்தது நாடு-இலெனின்
பொதுவுடைமைதந்த பீடு—மக்கள்
யாரும் சமமானூர் சார்ந்த தமைதியே
ஆற்றல் உழைப்பணி யோடு!

நாட்டுப் பணிக்குநல் ஊட்டம் தருவது
கூட்டு முடிவுகள் தீட்டல்-பொதுமைக்
கோட்பாட் டினைச்செயல் நாட்டல்-என
வேட்புற்றுக் கூட்டணி மக்களின் வேட்பாளன்
வேட்டல் தொழில்பல கூட்டல்!

கூட்டுப் பண்ணைஎங்கும் கூட்டுத் தொழில்எங்கும்
கூட்டி உழைப்போரை ஊக்கி—அங்குக்
கூட்டில் பிழைகாணில் போக்கி-இலெனின்
கூட்டுறவே வையக் கூட்டுற வாக்கினல்
கோட்புறுவோம் என்பார் தூக்கி!

ஆட்சி நிறுவனம் மாட்சியுற மக்கள்
அன்பின் உருவாக நின்ருர்—குறை
அல்லல் செய்வோர்களை வென்ருர்-தன்
நாட்டாட்சி வையம் வழிகொள ஆற்றலின்
நற்சான் றுரைகள் புகன்ருர்

பாட்டாளி மண்ணினில் பாட்டாளிக் கானவை
கட்டுப் பாட்டில் செல்ல வேண்டும்-ஒழுக்கப்
பாடு சிறந்திடல் யாண்டும்—கட்சிக்
கோட்பாட்டில் மண்ணகம் மீட்சியுறும் வணம்
கூறும் இலெனின்மொழி தூண்டும்!

மக்களுக் காகவே மக்கள் அரசியல்
மக்களால் ஆண்டிடும் காட்சி-இலெனின்
மாண்பினுல் கண்டது மீட்சி-பொருள்
சிக்கலைத் தீர்த்ததால் திக்கில் புரட்சியின்
செந்தீ விளக்கிற்று மாட்சி!

மக்கட் குழைப்பதில் மக்கட் கழிவதில்
மக்களின் தாயென மாறி-உலகை
மீட்கும் கருத்தினில் ஊறி-உரிமை
தக்கப் பயன்மரம் தந்திங் குவப்பதாய்த்
தின்னுடன் தேய்ந்தனன் மாரி! **1922**

# மக்கள் தொண்டே மருந்து

அன்பின் அருட்குணம், தன்னுடல் தொண்டுளம்
ஆற்றல் அளித்தே உயிர் உற்று
நின்று நிலைத்திடும் புத்தொளி புத்துயிர்
நெஞ்சக் கனவை மெய்யாக்கி
என்றும் புகழ்க்குறும் உண்மையை நன்மையை
ஈடில் பொதுமை அறமாக்கி,
நன்று செழித்திட நானிலம் ஓங்கிட
நாளும் உழைத்தே நலிவுற்றுர்.

இல்லார் செழிப்புற; செல்வர்கள் மன்னர்கள்
இல்லா ரிடத்தே நிகராகி
எல்லார்க் கும்பொருள் இன்புறும் வாழ்க்கையும்
எல்லார் உழைப்பும் பொதுவென்றார்;
நல்லார்க் கிலக்கணம் வீட்டினில் நாட்டினில்
நன்மைத் தொழிலைப் புரிவதுவே!
நில்லா அலைக்கடல் ஒத்திடும் அண்ணலின்
நினைப்பும் மொழியும் செயலிதுவே!

கொண்ட புரட்சியின் வெற்றியில் ஆட்சியின்
மகிழ்வில் குளித்துத் துள்ளாமல்
கொண்ட புரட்சியின் கொள்கையை வையகம்
கொண்டு புகழ்ந்து பின்தொடர
உண்டு மகிழ்ந்திடல் இன்றியே செய்பணி
ஒன்றில் இணைந்தே காலமெலாம்
தொண்டு பிறர்க்கென ஏழையர் வாழ்ந்திடத்
தோய்ந்து களைக்கும் திருமேனி!

கூறும் மருத்துவர் சொல்வதைக் கேட்டிடார்
கொள்கைப் பணியே மருந்தென்பார்
மாறும் புதுப்புவி பெற்றிடக் கற்றிட
மார்க்சில் நிலைத்து மணம்பெறுவார்
ஆறு புரிந்திடும் அன்பெனப் பண்பெனத்
தன்னை அழித்தே தொழில்செய்தார்
வீறு மிகுந்திடும் மாஇலெனின் பங்கினில்
வெற்றி இலாதே நோய்நோகும்!

மூன்னாள் மிகுந்ததோர் இன்னலும் அல்லலும்
முளைத்து வெடித்த புண்நோயும்
தன்நாள் வளத்தினை ஒய்விலாத் தொண்டினில்
தந்த தனிப்பேர் வேலைகளும்
இந்நாள் புகுந்தன வையகம் ஆட்டிய
ஏந்தல் பணியைத் தடுத்ததுவே;
சொன்னால் விடுத்திடார் "சோர்விலை ஆர்வமே
துயரம் உமக்கேன்?" என்பாரே!

கைகள் நடுங்கிட மெய்தடு மாறிடக்
கார்க்கி நகரில் புகுந்தங்கும்,
செய்யும் பணிக்கெனச் சேர்ப்பதில் வாழ்ந்தனர்
சிந்தை, செயலில் தோய்ந்தாடி!
"உய்யும் எமக்கெலாம் வாழ்வினைத் தந்தவர்
உறுநோய் அதனை வெறுக்கின்றோம்
ஐய விரைந்தெழு"! என்றனர்; மக்களின்
அன்பால் செழித்து மீண்டனரே! 1923

## கம்மியன் கண் மூடினான்

தேனி ருக்கும் மலரை நாடி
    தேனீக் கூட்டம் போதல்போல்
வானிருக்கும் ஒளியை எண்ணி
    உயிர்கள் மண்ணில் ஓங்கல்போல்
கானிருக்கும் திசையைக் கண்டு
    கரிய மேகம் கூடல்போல்
ஊனு யிர்ப்பில் கலந்தி னிக்கும்
    இலெனினைக் கண்டார் மக்களே!

கார்க்கி ஊரில் காதல் செல்வன்
கடமை என்ற கட்டிலில்
ஏர்த்தொ ழிற்கும் இணைத்தொ ழிற்கும்
இணைப்புண் டாக்கிச் செல்வங்கள்
யார்க்கும் என்ற விதிவ குத்த
ஏற்றம் யாவும் செம்மையாய்ச்
சார்ந்து வக்கும் சட்ட திட்டம்
சரிந்திடாமல் காக்கிறான்.

வறுமை நோயை மாய்த்த வன், தன்
வாழ்வின் நோயைக் காண்பனோ?
சிறுமை நோயைத் தீர்த்தவன், தன்
செய்ப ணிக்கண் ஓய்வனோ?
வெறுமை நோயை விரட்டி னோன்தன்
வேலையில் உவப்பதால்
தறுகண் ஆண்மை தளர வில்லை
சாரும் பணியில் ஆர்ந்தனன்.

தொழில்மனைக்கண் வேலை செய்யும்
தோழர் காண விரைந்தனர்
விழிமலர்ந்த அன்பி னாலே
இலெனினைக் கட்டித் தழுவினர்,
அழிவிலாத முத்தமிட்டார்
"ஐய நீர்ஓர் கம்மியன்
தொழிலர் நாங்கள் நின்றன் திட்டம்
வார்ப்பில் வடிப்போம்" என்றனர்;
கழிந்த திரவு கம்மி யன்தன்
கண்கள் கனவில் ஆழ்ந்தன. 1924

## மண்ணில் படாமல் மக்கள்
## கண்ணில் கொண்ட லெனின்!

ஒவ்வொரு நினைவினையும்
ஒவ்வொரு செயலினையும்
இவ்வுலக நன்மைக்கென்றே
இன்னமைதி போக்கிற்கென்றே
செவ்வையுறச் செய்தலெனின்
செத்த நிலையே-அவர்
செங்கொடியின் மின்னொளியாய்ச்
சிரிக்கின்றாரே!

வையகம் செழிப்பதற்கும்
வானகம் அளப்பதற்கும்
செய்தொழிலும் மெய்யறிவும்
செம்மைப்பொதுவுடைமையும்
கைகளுக்குள் தந்த இலெனின்
காலமாவதா? - அவர்
காலங்களின் காலமாகக்
கலந்து வக்கிறுர்.

பிறநாட்டை எதிர்க்காமல்
பிழைநாட்டம் கொள்ளாமல்
சிறந்துள்ள மக்கட்கெல்லாம்
செல்வங்களும் இன்பங்களும்
அறமுறச் செய்தஇலெனின்
அழிவதுண்டோ • மக்கள்
அன்பினிலும் ஆற்றலிலும்
ஆழ்ந்தி னிக்கிறுர்!

உலகமே ஓர்குடும்பம்
உற்றுரெல்லாம் உறவினர்
நலம் பெறச் செய்வதுவே
நல்லறிவும் நல்லாட்சியும்
துலங்குக அன்பமைதி
என்ற இலெனினின் - உயிர்
தூங்கலுண்டோ, தொண்டிலெல்லாம்
தோய்ந்து யர்கிறுர்!

நாட்டுப்புறம் நகர்ப்புறம்
ஆலைகளில் சாலைகளில்
கூட்டுப்பண்ணைச் சோலைகளில்
கூடும்செயல் திட்டங்களில்
காட்டும்ஒளி வாழ்வனைத்தும்
காட்டல் இலெனினே-வழி
காட்டியாக என்றுமுளார்
காதற் குயிராய்!

ஆண்டவர்கள் மாண்டதுண்டு,
அடிச்சுவடும் கண்டதில்லை
மீண்டதிலை மீட்பதில்லை
மேலும்அவர் தேவையில்லை,
ஆண்ட இலெனின் மாண்டதிலை
அண்டையில் உளார்-எங்கள்
ஆற்றலிலும் அன்பினிலும்
ஆவியில் உளார்!

என்றும் இலா எங்கும் இலா
ஏற்றமிகு பொதுவுடைமை
ஒன்றுலகாய் மாற்றவந்த
உண்மைச்செயற் பாடனைத்தும்
நின்றியங்கச் செய்த இலெனின்
நெஞ்சில் வாழ்கிறார்-இந்த
நீருலகம் உள்ளவரை
நேரில் இருப்பார்!

இயற்கையின் ஆற்றலினை
ஏவலுக் குகந்ததாக்கி
முயற்சியால் வாழ்நலத்தை
முன்னேற்றம் பெறச்செய்து
வியப்புறச் செய்த இலெனின்
வெற்றியில் எல்லாம்-அவர்
விறுண்மை தன்னுறுதி
வீங்கி நிற்குமே!

பொது நலம், புதுவினை
பொங்குகிறப் பங்கிலெல்லாம்
பொதுமக்கள் உள்துலங்கும்
புத்துணர்ச்சிப் புத்துயிராய்ப்
புதுமகிழ் வூட்டும் இலெனின்
மண்ணில் புகாமல்-எங்கள்
புறக்கண்கள் கண்டுவக்கப்
பூநீரில் கொண்டோம்!

கோடிகோடி வையமக்கள்
கூடிக்கூடி நின்வழிக்கீழ்ப்
பாடிப்பாடிச் செல்லுகின்றப்
பாங்கினையும் பண்பினையும்
கூடிமகிழ்ந் தேத்தலையும்
பாராய் இலெனினே-என்
பாட்டின் குரல் நின்செவிக்கண்
சேராய் இலெனினே!

*1969*

# இலெனினைப் பற்றி நேரு

இலெனின் தமது தாயகமான உருசியாவில் மட்டு மல்லாது உலகெங்கணும் ஒரு மிகப் பெரும் மரபாக மாறியுள்ளார். காலம் செல்லச் செல்ல, அவர் மேலும் பெரிதாக வளர்கிருர்; உலகச் சான்ருேர்களின் பண் பாட்டெல்லைக் கல்லில், அவரும் ஒருவராக மாறியுள் ளார். பெத்ரோகிராடு இலெனிகிராடாக மாறியுள்ளது; உருசியாவில் உள்ள ஒவ்வோர் இல்லத்திலும் ஓர் இலெனின் அறை அல்லது இலெனின் படம் உள்ளது. ஆயினும் அவர் நினைவுச் சின்னங்களிலோ, படங்களிலோ வாழ்ந்து வரவில்லை; மாருகத் தாம் ஆற்றிய மாபெரிய பணியிலும், அவரது செயல் சான்ருலும் பேராற்றல் பெறும் இன்றைய கோடானு கோடித் தொழிலாளர் களின் நெஞ்சங்களிலும், சிறந்ததொரு வருங்காலம் பற்றிய நம்பிக்கையிலும் அவர் வாழ்ந்து வருகிருர்.


நேருவின்—"உலக வரலாற்றுக் காட்சிகள்"

## கருவி நூல் பட்டியல்

1. வி. இ. இலெனின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு.
2. இலெனின் வாழ்க்கையில் சில ஏடுகள்.
3. இலெனின் வாழ்க்கையில் சில ஏடுகள். பாடியேவா.
4. இலெனினைப் பற்றி எனது நினைவுகள்.
5. இலெனினைப் பற்றிய நினைவுக் குறிப்புகள்.
6. நேரில் கண்ட உருஷ்யப் புரட்சி.
7. இளைஞர்களைக் கம்யூனிச முறையில் பயிற்று வித்தல்.
8. போதும் முதலாளித்துவம்.
9. சமதர்ம விளக்கம்.
10. பொதுவுடைமைதான் என்ன?
11. இலெனின் நூல்கள். (ஒருசில தமிழ்-ஆங்கிலம்)

## இதழ்கள்

12. சோவியத் நாடு,
13. சோவியத் பலகணி,
14. சோவியத் சிறப்புக் கட்டுரைகள்,
15. தாமரை,
16. சனசக்தி,
17. சாந்தி—முதலியன.



த. கோவேந்தன் (1932) கற்றலும் கற்பித்தலும் தொழிலாக உடையவர். முற்போக்கு எண்ணங்கொண்டவர். நல்ல நண்பர்களையும் — நல்ல நூல்களையும் வாழ்வின் துணையாகக் கொண்டவர். தனக்குத் தொழில் கவிதை, நாட்டுக் குழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்னும் கருத்துடையவர். ‘வானம்பாடி’, ‘கவிஞன்’ பாட்டேடுகளை நடத்தியவர். இவர் நூல்கள் பண்பும் பயனும் உடையன. பொதுவுடைமைச் சிந்தனையாளர்களின் எண்ணங்களைச் “சிந்தனைச் செம்மலர்கள்” என்ற நூலாக்கியுள்ளார். உலகப் பேரறிஞர்களின் உரை முத்துக்களை 50,000 குறள் நூற்பா வடிவங்களில் வடித்துள்ளார்.

* * *

கோவேந்தன் பாடிக் குவிக்கின்றான் நாளடைவில்
பாவேந்தன் ஆய்விடுவான்பார். —பாரதிதாசன்